# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8093675

1. District : சென்னை
மாவட்டம்
PS: CC-IV, VGAC
காவல்நிலையம்
Year: 2020
ஆண்டு
FIR No.: 3/AC/2020/CC-IV
மு.த.அ. எண்
Date: 24.11.2020
நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act (Amended) 2018 — Sections பிரிவுகள்: 7.7(A)
(ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from நாள் முதல் : 23.11.2020
Date to நாள் வரை : 23.11.2020
Time Period நேர அளவு :
Time from நேரம் முதல் : 13.40 hrs
Time to நேரம் வரை : 20.45 hrs
(b) Information Received at PS Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் : 24.11.2020
Time நேரம் : 06.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்
Time நேரம் :

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — சார்பதிவாளர் அலுவலகம் நீலாங்கரை, கதவு எண். 2/71, Kazura Garden, 2 வது தெரு, ECR Road, 13 km தென்கிழக்கு
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் : C.K. இளமாறன்,
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality : நாட்டினம் : இந்தியன்
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் : Deputy Inspection cell Officer (DICU)
(g) Address : முகவரி : சென்னை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலகம், சென்னை - 1

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
(1) D. கண்ணன், சார்பதிவாளர், நீலாங்கரை சார்பதிவாளர் அலு... சென்னை
(2) கலைக்கண்ணன், S/o. முனுசாமி, (இடைத்தரகர்), (3) மணிமாறன், S/o. மகாலிங்கம் (LIC Ag...
(4) K.J. ஹரிஹரன், S/o. ஜெயகுமார் (Document writer) (5) K. நடராஜன் S/o. கலியபெருமாள் (Building Contractor)

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

கணக்கில் வராத பணம் ரூ. 2,12,500/-

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet Enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 24/11/2020
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

24.11.2020 at 13.00 hrs

Name: பெயர் C. சாந்தி ராணி,
Rank: நிலை காவல் ஆய்வாளர், .........
சென்னை நகர பிரிவு - II
லஞ்ச ஒழிப்பு மற்றும்
கண்காணிப்பு துறை,
சென்னை - 16.

**FIR Continuation (Column – 12)**

இன்று 24.11.2020 ஆம் தேதி காலை 06.00 மணிக்கு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புதுறை, சென்னை நகரபிரிவு -4 காவல் ஆய்வாளர் ஆகிய நான் நிலையத்தில் இருந்தபோது 23.11.2020 ஆம் தேதி சென்னை மாவட்ட துணை ஆய்வுகுழும அலுவலர் திரு. C.K.குமரன் என்பவர் கணினியில் தட்டச்சு செய்து கொடுத்த புகாரை சென்னை நகரபிரிவு-4 துணை கண்காணிப்பாளர் திரு. ம.வெற்றிசெழியன் அவர்கள் பெற்று புகாரின் தன்மைபடி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய உத்தரவிட்டதன் பேரில் நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். புகாரின் விவரம் பின்வருமாறு. From Tr.C.K.Kumaran, Deputy Inspection Cell Officer, District Inspection Cell Officer, Chennai-01. To The Deputy Superintendent of Police, Vigilance & Anti-Corruption, Chennai City – IV Dett., Chennai – 16. Lr.No.A/205/2020, dated 23.11.2020 Sir, Sub:- Joint Surprise Check conducted on 23.11.2020 at Sub –Registrar Office, Neelankarai, Chennai District – Report - forwarded – reg. I state that on 23.11.2020 a joint surprise check was conducted at the O/o. the Sub-Registrar Office, Neelankarai, Chennai District along with the Deputy Superintendent of Police, V & AC, CC – IV Detachment, Chennai -16 and Deputy Superintendent of Police, V & AC, Kancheepuram their team between 13.40 hrs. and 20.45 hrs. During the joint surprise inspection an amount of Rs.2,12,500/- was seized and the incriminating documents were seized. I herewith sent the proceeding drawn during the time of Joint Surprise Inspection conducted on 23.11.2020 and the properties namely Rs.2,12,500/- (Rupees Two Lakh Twelve Thousand and Five Hundred Only) with incriminating documents for further course of action. Enclosure_1) Original Proceeding, dt.23.11.2020 2) Cash Rs.2,12,500/- 3) Documents seized during the joint surprise check. 4)Statement of Witnesses. Kindly acknowledge receipts of the same. (sd/-xxx) 23.11.2020 C.K. Kumaran, Deputy Inspection Cell Officer, Chennai District. Inspector Tmt.Jansi Rani, register a case and investigate. (sd/-xxx) 23.11.2020 M. VetryChezhiyan, DSP, CC-IV, V&AC Sir, Received the complaint and registered a case in Cr.No. 3/AC/2020/CC-IV U/s. 7,7A of PC Act as amended in 2018 on 24.11.2020 at 06.00 hrs (sd/xxx) 24.11.2020 C.Jansi Rani, Inspector, CC-IV, 24.11.2020 சென்னை மாவட்ட

ஆய்வுக்குழும அலுவலர் மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப்பிரிவு - IV மற்றும் காஞ்சிபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, காவல் துணைக் கண்காணிப்பாளர்கள் இணைந்து இன்று 23.11.2020 சென்னை - 600 115, நீலங்கரை, கதவு எண். 2/71, Kazura Garden, 2வது தெரு, ECR Road, முதல் மாடியில் இயங்கும் அலுவலகமான நீலங்கரை சார்பதிவாளர் அலுவலத்தில் மேற்கொள்ளப்பட்ட இருதுறை கூட்டுத்தணிக்கை. இருதுறை கூட்டுத்தணிக்கை மேற்கொண்ட அலுவலர்கள்: (1) திரு.C.K. குமரன், மாவட்ட துறை துணை ஆய்வுக்குழும அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், சென்னை மாவட்டம். (2) திரு.ம.வெற்றி செழியன், காவல் துணைக் கண்காணிப்பாளர், சென்னை நகரப் பிரிவு-IV, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை-16.(3) திரு.K.V. கலைசெல்வம், காவல் துணைக் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, காஞ்சிபுரம். (4) திருமதி.C. ஜான்சிராணி, காவல் ஆய்வாளர், சென்னை நகரப் பிரிவு-IV, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை-16. (5) திருமதி.A. நீலவேணி, காவல் ஆய்வாளர், சென்னை நகரப் பிரிவு-V, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை-16. (6) திரு. அண்ணாதுரை, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, காஞ்சிபுரம். (7) திருமதி.G.S. தமிழரசி, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, காஞ்சிபுரம். (8) திருமதி.R.கீதா, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, காஞ்சிபுரம். சென்னை - 600 115, நீலங்கரை, கதவு எண். 2/71, Kazura Garden, 2வது தெரு, ECR Road, முதல் மாடியில் இயங்கும் அலுவலகமான நீலங்கரை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்ய வரும் பொதுமக்களிடம் லஞ்ச பணம் பெற்று கொண்டு ஆவணங்களை பதிவு செய்வதாகவும், பதிவு செய்த ஆவணங்களை கொடுக்ககாமல் வைத்து கொண்டு லஞ்ச பணம் பெற்று கொண்டு ஆவணங்களை திருப்பி கொடுப்பதாகவும், கிடைத்த நம்பகமான இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்படி சார்பதிவாளர் அலுவலகத்தில் சென்னை மாவட்ட துணை ஆய்வுக்குழும அலுவலர், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப் பிரிவு-IV, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, காஞ்சிபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, காவல் துணைக் கண்காணிப்பாளர்கள், காவல் ஆய்வாளர்கள்

மற்றும் பார்டி சகிதம் இணைந்து இன்று (23.11.2020) மதியம் சுமார் 13.40 மணியளவில் இருதுறை திடீர் கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது. மேற்படி சார்பதிவாளர் அலுவலகமானது நீலங்கரையிலுள்ள E.C.R ரோட்டிலுள்ள Kazura Garden, 2வது தெரு, கதவு எண். 2/71ல் உள்ள Ground + 2 Floorல் 1வது மாடியில் நீலங்கரை சார்பதிவாளர் அலுவலகம் அமைந்துள்ளது. இந்த Kazura Garden, 2வது தெரு கிழக்கு மேற்க்காக செல்கிறது. இந்த தெருவில் SRO அலுவலகம் கிழக்கு பக்கம் பார்த்தது போல் பிரதான வாசலுடன் முதல் மாடியில் அமைந்துள்ளது. இந்த அலுவலகத்திற்கு உள்ளே இடது பக்கம் வடக்கு நோக்கி பார்த்தார் போல் வாசலுடன் சார்பதிவாளர் அறை உள்ளது. இந்த அறையில் சார்பதிவாளர் வடக்கு நோக்கி பார்த்தார் போல் அவரது இருக்கை இருந்தது. அவரது இருக்கைக்கு இடது பக்கம் Record Room கிழக்கு பக்கம் பார்த்தார்போல் வாசலுடன் உள்ளது. இந்த Record Roomக்கு நேர் எதிரே வடக்கு பக்கம் பார்த்தார் போல் 3 அடியில் கிழக்கு மேற்க்காக செல்லும் வழியும், அந்த வழியை ஒட்டினாற்போல் தெற்கு பக்கம் பார்த்தார் போல் கழிவறையும் உள்ளது. சார்பதிவாளர் இருக்கைக்கு நேர் எதிரேயும், அவரது வலது புறமும், சார்பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரியும் பணியாளர் இருக்கைகளும் மேற்கு பக்கம் பார்த்தார்போலும், தெற்கு பக்கம் பார்த்தார்போலும் உள்ளது. இந்த சார்பதிவாளர் அலுவலகத்திற்கு நுழையும் பிரதான நுழைவு வாயிலின் நேர் எதிரே வடக்கு பக்கம் பார்த்தார் போல் ஒரு கழிவறையும் அதனை ஒட்டினாற் போல் 3 அடியில் கிழக்கு மேற்க்காக செல்லும் வழியும் உள்ளது. சார்பதிவாளர் அலுவலகத்திற்கு நுழையும் பிரதான நுழைவு வாயிலின் நுழைந்தவுடன் வலது பக்கம் உள்ள Hallல் பொது மக்கள் அமருவதற்க்காக Steelஆல் செய்யப்பட்ட இருக்கைகள் போடப்பட்டுள்ளன. இந்த Hallக்கு வலது பக்கம் இரண்டு அறைகள் மேற்கு பக்கம் பார்த்தார்போல் வாசலுடன் உள்ளது. முதலாவது உள்ள அறையில் மதிய உணவு உண்ணுவதற்கும், பேப்பர் வைக்கும் Store Room ஆக பயன்படுத்தப்பட்டு வருகிறது. அதேபோல் அதற்கு பக்கத்தில் வடக்கு பக்கத்திலுள்ள அறையில் பழைய Record வைக்கும் அறையாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்த Hallக்கு இடது பக்கம் கிழக்கு பக்கம் பார்த்தார் போல் கணிணி அறை உள்ளது. இந்த சார்பதிவாளர் அலுவலகத்தில் கூட்டுத் தணிக்கையின் போது சார்பதிவாளர் அலுவலர் திரு.D.கண்ணன் அவர்கள் ஆஜரில்

இருந்தார். இந்த அலுவலகத்தில் 1)திரு.ஞானசெல்வம், Assistant, 2) திருமதி.நர்மதா, Assistant 3) திரு. ஆனந்த குமார், Junior Assistant, 4) திரு.பரதன், Data Entry Operator. 5) திரு.ராஜா, Data Entry Operator 6) திரு.மணிகண்டன், Camera Operator 7) திரு.சிகாமணி, Office Assistant ஆகியோர் பணியில் ஆஜரில் இருந்தார்கள். இச்சோதனையின் போது சார்பதிவாளர் அமர்ந்திருக்கும் அறையில் கீழ்காணும் கணக்கில் வராத லஞ்ச பணம் அங்கு வந்திருந்தவர்களிடம் திரு.D.கண்ணன் சார்பதிவாளருக்கு கொடுப்பதற்காக வைக்கப்பட்டிருந்தது.

| வரிசை எண் | யாரிடமிருந்து கைப்பற்றப்பட்டது | எவ்வளவு கைப்பற்றப்பட்டது |
|---|---|---|
| 1) | திரு.கமலகண்ணன், இடைத்தரகர், பெரும்பாக்கம் என்பவர் எடுத்து ஆஜர்படுத்தியது. | ரூ.1,00,000/-<br>[200 X Rs. 500 = Rs.1,00,000/-]<br>Rs18,000/-<br>[ 6 X Rs.2000= 12000;<br>12 X Rs.500 = Rs.6000;] |
| 2) | திரு.மணிமாறன், Agent என்பவர் எடுத்து ஆஜர்படுத்தியது. | ரூ.40,000/-<br>[80 X Rs.500 = Rs.40,000/- ] |
| 3) | திரு.ஹரிஹரன், Document Writter என்பவர் எடுத்து ஆஜர்படுத்தியது. | ரூ.34,500/- [69 X Rs.500 = Rs. 34,500/-] |
| 4) | திரு.நடராஜ் Building Contractor, என்பவர் எடுத்து ஆஜர்படுத்தியது. | ரூ,20,000/-<br>[ 40 X Rs.500 = Rs.20,000/-] |

இந்த திடீர் கூட்டு தணிக்கையின்போது சார்பதிவாளர் அறையில் இருந்த திரு.கமலகண்ணன், த/பெ.முனுசாமி என்ற நபரை விசாரணை செய்யப்பட்டது. திரு.கமலகண்ணன் இவ்வலுவலகத்திற்கு சார்பதிவாளர் பழக்கம் ஏற்பட்டதால் அடிக்கடி வருவேன் என்றும், திரு.கண்ணன், சார்பதிவாளர் கேட்டு கொண்டதின்பேரில், அவர் சொல்லும் நபர்களிடம் அவர் சொல்லும்படி கேட்டு அவர்கள் கொடுக்கும் பணத்தை பெற்று மாலை பணி முடித்து செல்லும்போது சார்பதிவாளரிடம் அந்த பணத்தை கொடுத்து வந்ததாகவும் கூறினார். மேலும் அவரது பேண்ட் வலது பாக்கெட்டிலிருந்து

ஒரு காக்கி கவர் எடுத்து ஆஜர் செய்தார். அதில் ரூ.1,00,000/- [200 X Rs. 500 = Rs.1,00,000/-] இருந்தது. தொடர்ந்து அவரது பேண்ட் பின்பாக்கெட்டிலிருந்து ஒரு வெள்ளை நிற பேப்பரை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பேப்பரை பிரித்து பார்க்கும்போது அதில் ரூ.18,000/- [6 X Rs.2000= 12000; 12 X Rs.500 = Rs.6000] தொடர்ந்து அவரிடம் விசாரணை செய்யப்பட்டது. இந்த காக்கி கவரிலிருக்கும் ரூ.1,00,000/-மும், வெள்ளை நிற பேப்பரிலிருக்கும் ரூ.18,000/- குறித்து அவரிடம் கேட்கப்பட்டது. திரு.கமலகண்ணன், சார்பதிவாளர் நீலங்கரை அலுவலகத்திற்கு இன்று வந்ததாகவும், சார்பதிவாளர் சொன்னதின்பேரில் தான் சார்பதிவாளர் அலுவகத்திற்கு வந்திருந்த ஒரு நபரை சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து சந்தித்ததாகவும், அவர் ஒரு வெள்ளை நிற பேப்பரில் சார்பதிவாளர் கொடுக்க சொல்லியதாகவும் கூறி தன்னிடம் கொடுத்ததாகவும் அதை பெற்று தனது பின்பாக்கெட்டில் வைத்து கொண்டதாகவும், அதேபோல் சார்பதிவாளர் சொன்னதின்பேரில் மற்றொரு நபர் தன்னை சார்பதிவாளர் அறைக்குள் வைத்து தன்னை சந்தித்ததாகவும், சார்பதிவாளர் கொடுக்க சொல்லியதாகவும் கூறி தன்னிடம் ஒரு காக்கி கவரை கொடுத்ததாகவும், அதை பெற்று தனது பேண்ட்டின் முன்பக்க வலது பாக்கெட்டில் வைத்து கொண்டதாகவும், தற்சமயம் திடீர் கூட்டு ஆய்வு சோதனை செய்தபோது நீங்கள் விசாரிக்கபோது நடந்ததை கூறியதாகவும் சொன்னார். மேலும் தான் வழக்கமாக நீலங்கரை சார்பதிவாளர் சொல்லும் நபர்களிடம் பலமுறை அவர்கள் கொடுக்கும் பணத்தை பெற்று சார்பதிவாளர் வேலை முடித்து போகும் போது பலமுறை அவர்களிடம் கொடுத்ததாகவும் கூறினார். இப்பணம் ஆவணங்களை பதிவு செய்ய, விடுவிக்க லஞ்சமாக தரகர் திரு.கமலகண்ணன் மூலம் சார்பதிவாளர் திரு.கண்ணன் பெற்றுள்ளது தெரியவருவதால் ரூ.1,00,000/- [200 X Rs. 500 = Rs.1,00,000/-], ரூ.18,000/- [ 6 X Rs.2000= 12000; 12 X Rs.500 = Rs.6000] ஆக மொத்தம். ரூ. 1,18,000/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. தொடர்ந்து திரு.கமலகண்ணன் அணிந்திருந்த சட்டையின் வெளிபுற பாக்கெட்டிலிருந்து ரூ.160/- [1 X Rs.100; 3 X Rs.20 = Rs.160/-] எடுத்து ஆஜர் செய்தார். இந்த பணத்தை பற்றி திரு.கமலகண்ணனிடம் விசாரிக்கப்பட்டது. அவர் இப்பணம் தன்னுடைய சொந்த செலவிற்க்காக வைத்திருந்தாக கூறினார். எனவே

ரூ.160/- அவரிடம் திருப்பி ஒப்படைக்கப்பட்டது. இந்த திடீர் கூட்டு தணிக்கையின்போது சார்பதிவாளர் அறையில் இருந்த திரு.M.மணிமாறன், த/பெ.மகாலிங்கம் என்பவரை விசாரணை செய்யப்பட்டது. தான் L.I.C Agentஆக பணி செய்து வருவதாக, ஆவணங்களை சரிபார்க்க மற்றும் பதிவு செய்ய சார்பதிவாளர் அலுவலகம் வந்து செல்வதாகவும், இன்று திரு.K.நடராஜன், த/பெ.கலியபெருமாள் என்பவர் வீடு வாங்குவதற்க்காக பத்திர பதிவு செய்ய, பத்திரங்களை சரிபார்க்க அவருடன் வந்தததாகவும், திடீர் கூட்டு தணிக்கை செய்யும்போது, எனது பேண்ட்டின் வலது பக்க மூன் பாக்கெட்டில் ரூ.40,000/- எடுத்து ஆஜர் செய்த்தாகவும், தன்னிடம் ரூ.40,000/-ம் வைத்திருந்ததற்கான காரணம் கேட்டபோது சரியான காரணம் கூறாததால், இப்பணம் ஆவணங்களை பதிவு செய்ய, சார்பதிவாளர் திரு.கண்ணன் என்பவருக்கு கொடுக்க கொண்டு வந்த லஞ்ச பணமாக இருக்ககூடும் என்று தெரியவருவதால் ரூ.40,000/- [80 X Rs.500] விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் கூட்டு தணிக்கையின்போது சார்பதிவாளர் அறையில் இருந்த திரு.ஹரிஹரன், த/பெ.ஜெயகுமார் என்பவரை விசாரணை செய்யப்பட்டது. தன்னுடைய அம்மா திருமதி.விமலா நீலங்கரை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு கீழே Document Writter ஆக அலுவலகம் நடத்தி வருவதாகவும் சுமார் பத்து நாட்களுக்கு முன்பு பேரானந்தம், லோகனதன் வந்து பத்திர பதிவு சம்பந்தமாக வந்து கேட்டு சென்றதாகவும், நீலங்கரை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு கொடுக்க ரூ.60,000/- ஆகும் என்று தெரிவித்தாகவும், அவர்கள் இன்று ரூ.60000/-தொடு வந்ததாகவும், ரூ.25,000/- Stamp Duty செலவு செய்தது போக, மீதி ரூ.34,500/- வலது பக்க பேண்ட் பாக்கெட்டில் வைத்திருந்தாகவும், கூட்டு தணிக்கையில் அந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ததாகவும், விளக்கம் கேட்கும் போது அந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்து, Neelankarai Sub-Registrarக்கு கொடுக்க வைத்திருந்ததாக கூறினார். எனவே ரூ.34,500/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் கூட்டு தணிக்கையின்போது சார்பதிவாளர் அறையில் இருந்த திரு.நடராஜன், த/பெ.கலியபெருமாள் என்பவரை விசாரணை செய்யப்பட்டது. தான் Building Contractor ஆக பணி செய்துவருவதாக தெரிவித்தார். அவர் அணிந்திருந்த வேட்டிக்கு அடியில் அணிந்திருந்த Trowser வலது பக்க பாக்கெட்டிலிருந்து ரூ.20,000/- எடுத்து ஆஜர் செய்தார். இதைப்பற்றி

அவரிடம் விசாரணைசெய்தபோது, தான் வாங்கபோது இடம் சம்பந்தமாக SRO, நீலங்கரை அலுவலகத்திற்கு கீழே உள்ளே Document Writter அருண் என்பவருக்கு கொடுக்க கொண்டு வந்ததாக கூறினார். எனவே இப்பணம் ரூ.20,000/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இச்சோதனையின்போது இவ்வலுவலத்திலிருந்த திரு.G.தன்பத்ராஜ், வயது 53, த/பெ. கௌதம் சந்த் விசாரணை செய்யப்பட்டது. தனது மனைவி T.சகுந்தலா என்பவரின் பெயரில் இடம் வாங்கி நீலங்கரை சார்பதிவாளர் அலுவலகத்தில் கடந்த 09.11.2020-ந் தேதி பதிவு செய்ததாகவும், இது சம்பந்தமாக 21.11.2020-ந்தேதி தனக்கு குறுஞ்செய்தி வந்ததாகவும், அதில் தனது பத்திரம் தயாராக இருப்பதாகவும், நேரில் வந்து வாங்கி கொள்ளும்படியும் குறிப்பிடப்பட்டிருந்ததாகவும், இன்று தனது தம்பி மகன் திரு.பிரவீன் என்பவருடன் நீலங்கரை சார்பதிவாளர் அலுவலகம் வந்ததாகவும், தான் வைத்திருந்த ரூ.60,000/- பற்றி திடீர் சோதனை நடத்திய போது விசாரணை செய்ததாகவும், தான் அடையாறு லட்சுமி நகரிலுள்ள ரமேஷ்குமாவத் என்பவர் தன்னிடம் வாங்கிய பணத்தை இன்று திருப்பி கொடுத்ததாகவும், தனது தம்பி மகன் பிரவீனுக்கு, ரகண்சந்த் மகன் ஹேமந்த் என்பவருக்கு கைமாறாக கொடுத்த பணம் ரூ.1,04,800/- திரும்பி வாங்கி பிரவீனுக்கு கொடுத்ததாகவும், அதன்பிறகு நீலங்கரை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வந்ததாகவும் தெரிவித்தார். தொடர்ந்து திரு.பிரவீன் என்பவரை விசாரணை செய்யப்பட்டது. அதில் அவர் வைத்திருந்த ரூ.1,33,920/- பற்றி விசாரணை செய்யப்பட்டது. திரு.பிரவீன் அவரது பெரியப்பா திரு.G. தன்பத்ராஜ் சொன்னபடியே ரூ.1,04,800/- திரு.ஹேமந்த் என்பவரிடம் வாங்கி வந்ததாக தெரிவித்தார். மேலும் தன் வீட்டின் வாடகை கட்டுவதற்காக ரூ.29,120/- வைத்திருந்ததாக தெரிவித்தார். இவர்கள் இருவரும் சொன்ன காரணம் ஏற்க தக்கதாக இருந்ததால், திரு.G. தன்பத்ராஜ் என்பவரிடம் ரூ.60,000/-த்தையும், திரு.பிரவீன் என்பவரிடம் ரூ. 1,33,920/- திருப்பி ஒப்படைக்கப்பட்டது. இச்சோதனையின்போது பத்திரபதிவுக்கு வந்திருந்த திரு.P. வெங்கடேசன், வழக்கறிஞர் என்பவர் விசாரணை செய்யப்பட்டது. அவர் வைத்திருந்த பணம் ரூ.9,900/- விசாரணை செய்யப்பட்டது. அவர் சோகன்லால் என்பவர் Sale Deed பத்திர பதிவு செய்வதற்காக ஆவணங்களை தனது Senior மூலம் தயார் செய்து கொடுத்தற்காகவும், பணம் ரூ.9,900/- கொடுத்ததாக தெரிவித்தார். எனவே இது சம்பந்தமான காரணம் ஏற்க

தக்கதாக இருந்ததால், அப்பணம் அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. இச்சோதனையின் போது திரு.M. முத்து என்பவர் திரு.K. நடராஜன் என்பவர் வீடு வாங்கி சாட்சி கையெழுத்து போட வந்தாகவும் அவர் வைத்திருந்த ரூ.12,970/- எடுத்து ஆஜர் செய்தார். இப்பணம் பற்றி அவரிடம் விசாரணை செய்யப்பட்டது. தான் சென்டிரிங் காண்டிரக்ட் வேலை செய்வதால் தனக்கு கீழ் வேலை செய்யும் நபர்களுக்கு சம்பளம் கொடுக்க வைத்திருந்தாக கூறினார். இவர் சொன்ன காரணம் ஏற்க தக்கதாக இருந்ததால், அவரிடமே பணம் ரூ.12,970/- திருப்பி ஒப்படைக்கப்பட்டது. இச்சோதனையின் போது திரு. நடராஜனுக்கு வீடு விற்பனை செய்யும் திரு.பிரபுவை விசாரணை செய்யப்பட்டது. அவர் வைத்திருந்த ரூ5,900/- பற்றி விசாரணை செய்யப்பட்டது. இப்பணம் அவர் நடத்தும் சலூன் கடைக்கு பொருட்கள் வாங்குவதற்காக வைத்திருந்தாக கூறினார். இவர் சொன்ன காரணம் ஏற்க தக்கதாக இருந்ததால், அவரிடமே பணம் ரூ5,900/- திருப்பி ஒப்படைக்கப்பட்டது. இச்சோதனையின்போது சார்பதிவாளர் அலுவலகத்தில் பணியாற்றி கொண்டிருந்த பணியாளர்கள் தங்களிடமிருந்த பணத்தை எடுத்து விசாரணைக்கு ஆஜர் செய்தனர். அதற்குண்டான காரணத்தையும் தெரிவித்தனர். அவர்கள் சொன்ன காரணம் ஏற்றுகொள்ளும்படி இருந்ததால், கீழே தெரிவிக்கப்பட்டுள்ள பணத்தை அவர்களிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது.

| வரிசை எண் | கீழ்காணும் நபர்கள் இச்சோதனையின்போது அவர்களாக ஆஜர்படுத்திய விவரங்கள் | ஆஜர்படுத்தி மற்றும் திருப்பி ஒப்படைக்கப்பட்ட பணத்தின் விவரங்கள். |
|---|---|---|
| 1) | திரு.கண்ணன், சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், நீலங்கரை, | Rs.450/- (2 X Rs.200; 1 X Rs. 20; 3 X Rs.10) |
| 2) | திரு.ஞானசெல்வன், Assistant, O/o. Sub-Registrar, Neelankarai | ரூ,590/- [ 1 X Rs.200; 2 X Rs.100; 2X Rs.50; 4 X Rs.20; 1 X Rs.10] |
| 3) | திருமதி. நர்மதா, Assistant, O/o. Sub-Registrar, Neelankarai | ரூ.420/- [ 3 X Rs.50; 2 X Rs.100; 1 X Rs.20; 5 X Rs.10] |
| 4) | திரு.ஆனந்தகுமார், Junior Assistant, O/o. Sub-Registrar, | ரூ.500/- [ 1 X Rs.500] |

| | | |
|---|---|---|
| | Neelankarai | |
| 5) | திரு.சிகாமணி, Office Assistant, O/o. Sub-Registrar, Neelankarai | ரு.500/- [1X Rs.500] |
| 6) | திரு.பரதன், Data Entry Operator, O/o. Sub-Registrar, Neelankarai | ரு.230/- [ 1 X Rs.200; 1 X Rs.20; 1 X Rs.10] |
| 7) | திரு.ராஜா, Data Entry Operator, O/o. Sub-Registrar, Neelankarai | ரு.425/- [ 1 X Rs.200; 2 X Rs.100; 5 X Rs.5] |
| 8) | திரு.மணிகண்டன், Camera Man, The Zigma Technologies India (p) Ltd., O/o. Sub-Registrar, Neelankarai | ரு.50/- [ 1 X Rs.50] |

இச்சோதனையின்போது சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்த Document Writter மற்றும் தனிநபரிடம் அவர்கள் வைத்திருந்த பணம் சம்பந்தமாக விசாரணை செய்யப்பட்டது. அவர்கள் வைத்திருந்த பணத்தை எடுத்து விசாரணைக்கு ஆஜர் செய்தனர். அதற்குண்டான காரணத்தையும் தெரிவித்தனர். அவர்கள் சொன்ன காரணம் ஏற்றுகொள்ளும்படி இருந்ததால், கீழே தெரிவிக்கப்பட்டுள்ள பணத்தை அவர்களிடமே திருப்பிஒப்படைக்கப்பட்டது. இச்சோதனையின் போது சார்பதிவாளர் அலுவலகத்திலுள்ள கீழ்காணும் Document Writter, Broker மற்றும் தனிநபர் ஆகியோரிடம் விசாரணை செய்யப்பட்டது. அவற்றின் விவரம் கீழ்வருமாறு உள்ளது:-

| **வரிசை எண்** | **நபர்களின விவரங்கள்** | **ஆஜர்படுத்தி மற்றும் திருப்பி ஒப்படைக்கப்பட்ட பணத்தின் விவரங்கள்.** |
|---|---|---|
| 1) | திரு.சிவராஜ் | Rs.240/- (1 X Rs.200; 1 X Rs.20; 2 X Rs.10) |
| 2) | திரு.மூர்த்தி | ரு28,200/- [56 X Rs.500 ; 1 X Rs.200] |

இச்சோதனையின்போது திரு.சிவராஜ் வைத்திருந்த ரு.240/- பற்றி விசாரிக்கப்பட்டது. அவர் சொந்த செலவிற்காக வைத்திருந்ததாக தெரிவித்தார். எனவே அந்த பணம் அவரிடம் திருப்பி ஒப்படைக்கப்பட்டது. சோதனையின்போது திரு.மூர்த்தி வைத்திருந்த ரு28,200/- பற்றி விசாரிக்கப்பட்டது. அவர் உறவினர்

திருமணத்திற்கு நகை வாங்கி மொய் செய்வதற்காக கொண்டு வந்த சீட்டு பணம் என்று தெரிவித்தார். எனவே இவர் சொன்ன காரணம் ஏற்கதக்கதாக இருந்ததால், இப்பணம் அவரிடம் திருப்பி ஒப்படைக்கப்பட்டது. இச்சோதனையின்போது நீலங்கரை சார்பதிவாளர் அலுவலகத்தில் பணியாற்றும் பணியாளர்கள் தினந்தோறும் தனிநபர் ரொக்க பதிவேட்டில் பதியபட்டுள்ள ரொக்கம் சம்பந்தமாக ஆராயப்பட்டது. இதில் கீழ்காணும் தொகை தனிநபர் ரொக்க பதிவேட்டில் ரொக்கம் பதிவுசெய்யப்பட்டுள்ளது. அதன் விவரம் கீழ் உள்ளவாறு:-

| வரிசை எண் | கீழ்காணும் நபர்கள் இச்சோதனையின்போது அவர்களாக ஆஜர்படுத்திய விவரங்கள் | நீலங்கரை சார்பதிவாளர் அலுவலகத்திலுள்ள தனிநபர் ரொக்கபதிவேட்டில் பதியபட்டுள்ள ரொக்கம் பற்றி விவரம் | சோதனையின்போது இவ்வலுவலகத்தில் பணியாற்றும் நபர்கள் வைத்திருந்த ரொக்கத்தின் விவரம் |
|---|---|---|---|
| 1) | திரு.கண்ணன், சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், நீலங்கரை. | Rs.450/- | தற்சமயம் ரூ.450லிருந்து ரூ.430/- வைத்திருந்தார். |
| 2) | திரு.ஞானசெல்வன், Assistant, O/o Sub-Registrar, Neelankarai | Rs.600/- | தற்சமயம் ரூ.600லிருந்து ரூ.590/- வைத்திருந்தார். |
| 3) | திருமதி. நர்மதா, Assistant, O/o Sub-Registrar, Neelankarai | Rs.500/- | தற்சமயம் Rs.500/- லிருந்து ரூ.420/- வைத்திருந்தார். |
| 4) | திரு.ஆனந்தகுமார், Junior Assistant, O/o Sub-Registrar, Neelankarai | Rs.700/- | தற்சமயம் Rs.700/- லிருந்து ரூ.500/- வைத்திருந்தார். |
| 5) | திரு.சிகாமணி, Office Assistant, O/o Sub-Registrar, Neelankarai | Rs.500 | சரியாக ரூ.500/-உள்ளது. |
| 6) | திரு.பரதன், Data | Rs.500 | தற்சமயம் |

| | | | |
|---|---|---|---|
| | Entry Operator, O/o Sub-Registrar, Neelankarai | | Rs.500லிருந்து ரூ.230/- வைத்திருந்தார். |
| 7) | திரு.ராஜா, Data Entry Operator, O/o Sub-Registrar, Neelankarai | Rs.426 | சரியாக ரூ.426/- உள்ளது. |
| 8) | திரு.மணிகண்டன், Camera Man, The Zigma Technologies India (p) Ltd., O/o Sub-Registrar, Neelankarai | Rs.400 | தற்சமயம் Rs.400லிருந்து ரூ.50/- வைத்திருந்தார். |

இந்த தனிநபர் ரொக்க பதிவேட்டிலுள்ள பதிவின் அடிப்படையில் இவர்களிடம் விசாரணை செய்யப்பட்டது. அதில் எல்லா பணியாளர்களும் தனிநபர் ரொக்க பதிவேட்டில் பதிவு செய்த தொகைக்கு சரியாக திரு.சிகாமணி, திரு.ராஜா, திரு.மணிகண்டன் ஆகியோர் வைத்திருந்ததால், இந்த பணத்தை திருப்பி அவர்களிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. மேலும் பணத்தை குறைவாக வைத்திருந்த நபர்களிடம் விசாரிக்கப்பட்டது. அவர்கள் கொண்டு வந்த பணத்தில் செலவு செய்யப்பட்டு விட்டதாக தெரிவித்தார்கள். இந்த பணமும் அவர்களிடம் திருப்பி ஒப்படைக்கப்பட்டது. இச்சோதனையின்போது தனிநபர் மற்றும் இடைத்தரகர் வைத்திருந்த **கணக்கில் வராத பணம்** ரூ.2,12,500/- இவ்வலுவலகத்தில் வைத்து கைப்பற்றியது சம்பந்தமாக திரு.கண்ணன், சார்பதிவாளர், நீலங்கரை அவர்களிடம் விசாரணை செய்யப்பட்டது. சார்பதிவாளர் அலுவலகத்தில் கட்டணம் Online மூலமாகவே பெறப்படுவதாகவும், இவ்வலுவலகத்தில் ஆவணதாரர்களிடமிருந்து பெறப்பட்ட தொகை இவ்வலுவலகத்திற்கு தொடர்பில்லை என்றும், மேற்கண்ட தொகைக்கும் மேற்கண்ட அலுவலகத்திற்கும் எந்தவித சம்பந்தமுமில்லை என்றும் தெரிவித்தார். இந்த சார்பதிவாளர் அலுவலகத்தில் லஞ்சம் வாங்குவதும் கொடுப்பதும் குற்றம் என எந்த அறிவிப்பு பலகையுமில்லை. இந்த ஆய்வின்போது மாவட்ட துணை ஆய்வு குழு அலுவலர் அவர்களால் அலுவலக பணியிலிருந்தவர்கள் திரு.கண்ணன், திரு.ஞானசெல்வன், திருமதி.நர்மதா, திரு. ஆனந்தகுமார், திரு.சிகாமணி, திரு.

மணிகண்டன், திரு.ராஜா, திரு.பரதன், Broker திரு. கமலகண்ணன தனிநபர்கள் மற்றும் Document Writter திரு.மூர்த்தி, திரு.பேரானந்தம், திரு.மணிமாறன், திரு.ஹரிஹரன், திரு.பிரபு, திரு.வெங்கடேசன், திரு.முத்து, திருமதி.விஜயலட்சுமி, திரு.சிவராஜ், திரு.நடராஜன், திரு.பிரவீன் மற்றும் திரு.தன்பத்ராஜ் ஆகியோர்களுக்கு வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டது. இந்த சோதனையின் போது நீலங்கரை சார்பதிவாளர் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் தனிநபர் ரெக்க பதிவேடு மூன்று பதிவேடு (23.11.2020), தணிக்கை வருகை பதிவேடு ஜனவரி 2020 (18.11.2020 முதல் 23.11.2020), நவம்பர் மாதம் 2020 க்குண்டான வருகை பதிவேடு, பார்வையாளர் பதிவேடு 10.11.2020 முதல் 23.11.2020 வரை நகல் எடுத்து மாவட்ட ஆய்வு குழும துணை அலுவலர் மற்றும் சார்பதிவாளர் அவர்கள் சான்றொப்பம் பெற்று விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த இருதுறை கூட்டுத்தணிக்கை இன்று (23.11.2020) சுமார் 20.45 மணிக்கு முடிக்கப்பட்டது. இந்த கூட்டுத்தணிக்கையின்போது அலுவலக பணிகளுக்கோ, பொது மக்களுக்கோ, உடமைகளுக்கோ எவ்வித பாதிப்புமின்றி உரிய முறையில் முடிக்கப்பட்டது. (sd/-xxx) திரு.C.K. குமரன், மாவட்ட துணை ஆய்வுக்குழும அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், சென்னை மாவட்டம். (sd/-xxx) திரு.ம.வெற்றி செழியன், காவல் துணைக் கண்காணிப்பாளர், சென்னை நகரப் பிரிவு-IV, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை-16. (sd/-xxx) திரு.K.V. கலைசெல்வம், காவல் துணைக் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, காஞ்சிபுரம், (sd/-xxx) திருமதி.C. ஜான்சிராணி, காவல் ஆய்வாளர், சென்னை நகரப் பிரிவு-IV, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை-16. (sd/-xxx) திருமதி.A. நீலவேணி, காவல் ஆய்வாளர், சென்னை நகரப் பிரிவு-V, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை-16. (sd/-xxx) திருமதி.G.S. தமிழரசி, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, காஞ்சிபுரம். (sd/-xxx) திரு. அண்ணாதுரை, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, காஞ்சிபுரம். (sd/-xxx) திருமதி.R.கீதா, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, காஞ்சிபுரம். (sd/-xxx) திரு.கமலகண்ணன், த/பெ. முனுசாமி,

No.3/304 அன்னை இந்திர நகர், பெரும்பாக்கம், சென்னை. (sd/-xxx) திரு.மணிமாறன், த/பெ.மகாலிங்கம், No.69/1, T5, 3rd Floor, Hema Construction, எல்லையம்மன் கோவில் தெரு, வண்ணாண்துறை, அடையாறு, சென்னை. (sd/-xxx) திரு.K.J. ஹரிஹரன், த/பெ. ஜெயகுமார், No. 239, 2வது தெற்கு குறுக்கு தெரு, நீலங்கரை, சென்னை- 115. (sd/-xxx) திரு.நடராஜ், த/பெ. கலியபெருமாள், கதவு எண்.3/410A, குமர குரு அவின்யூ, 5வது குறுக்கு தெரு, நீலங்கரை, சென்னை - 115. (sd/-xxx) திரு.G. தன்பத்ராஜ், த/பெ.கௌதம்சந்த், No.23, பள்ளியப்பன் தெரு, சௌக்கார்பேட்டை, சென்னை. (sd/-xxx) திரு.பிரவீன், த/பெ.G. பிரகாஷ், No.23, பள்ளியப்பன் தெரு, சௌக்கார்பேட்டை, சென்னை. (sd/-xxx) திரு.D. கண்ணன், சார்பதிவாளர், நீலங்கரை சார்பதிவாளர் அலுவலகம், சென்னை.

முதல் தகவல் அறிக்கையின் அசலை கனம் தலைமை குற்றவியில் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் செங்கல்பட்டு அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தபட்ட அதிகாரிகளுக்கு அனுப்பிவைத்தேன்.

(ச.ஜானகிராணி), 24/11/2020

காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை,
சென்னைநகரபிரிவு - IV,
ஆலந்தூர், சென்னை-16.